# அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

# Ancient Culture and Customs in Moral Literature

**முனைவர் ச.ஆதிநாராயணசாமி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, கோவை – 641010.

**Dr S. Athinarayanasamy**, Assistatn Professor, Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar arts science Tamil college Perur Coimbatore-10

**DOI : 10.5281/zenodo.7494301**

**Abstract**

Various types of literature have appeared in Tamil language from time to time. Among them, justice literatures that emphasize virtue were created during the Kalaprara period. These are classified into eighteen texts. In many of these literary books, news about Tamil life and cultural elements are found in abundance. Every activity of Tamil's natural lifestyle is influenced by culture. This review article examines and discusses the character of such Tamil life and culture in literature. Virtue is a noun. The term aram is derived from the word "to cry". This can be understood with the words 'Aram Sing' and 'Aram Sing'. It is virtue to do without expecting any benefit in helping others. What appeared on behalf of this religion is the literature of charity. These literatures highlight the moral concepts while cultivating human life. The ideals enshrined in the moral literature tend to direct the virtuous life and lead to the paths of blissful salvation. In this way, we can find about the culture and customs of Palandamizhar in the literature.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் மொழியில் காலந்தோறும் பலவகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் அறத்தை வலியுறுத்தக் கூடிய நீதி இலக்கியங்கள் களப்பிரர் காலத்தில் உருப்பெற்றன. இவை பதினெண்கீழ்கணக்கு நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் அறஇலக்கிய நூல்கள் பலவற்றில் தமிழர் வாழ்வியல் குறித்த செய்திகளும் பண்பாட்டுக் கூறுகளும் மிகையாகக் காணப்படுகின்றன. தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலின் ஒவ்வொரு செயல்பாடும் பண்பாட்டின் தாக்கம் நிறைந்ததாக அமைந்துள்ளது. அத்தகைய தமிழர் வாழ்வியலும் பண்பாடும் அற இலக்கியங்களில் அமைகின்ற பாங்கினை ஆராய்ந்து உரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**Keywords:** அறம் இலக்கியம், நீதி இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், விருந்தோம்பல், நம்மிக்கை, பழக்க வழக்கங்கள்

**முன்னுரை**

அறம் என்பது பெயர்ச்சொல்லாகும். அறம் என்ற சொல்லாட்சி "அறுதல்" என்னும் பதத்தில் இருந்து தோன்றியதாகும். இதனை அறம் பாடுதல், அறும்படி பாடுதல் என்னும் சொற்களைக்

கொண்டு உணரலாம். பிறர் பொருட்டு செய்கின்ற உதவியில் எத்தகையதொரு பயனையும் எதிர்பாராமல் செய்வது அறமாகும். இவ்வறத்தின் சார்பில் தோன்றியவை அற இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் மனித வாழ்வியலைப் பண்படுத்துகின்ற நிலையில் அறநெறிக்குரிய கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. அற இலக்கியங்களில் இயம்பப்பட்ட கருத்தாடல்கள் செம்மை வாழ்வியலை நன்னெறியில் செலுத்துவதோடு பேரின்பமாகிய முக்திக்குரிய பாதைகளில் வழி நடத்திச்செல்லும் தன்மை கொண்டனவாகவும் அமைகின்றன. அவ்வகையில் அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்துக் காணலாம்.

**இறை நம்பிக்கை**

பண்டைய தமிழர் இறைவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கைகொண்டு இருந்தனர். பெருந்தெய்வ வழிபாட்டைக் காட்டிலும் செறு தெய்வ வழிபாட்டில் மக்கள் பெரிதும் ஈடுபாட்டினைக் கொண்டவர்களாகப் பலியிடுதல் போன்ற சடங்குகளையும் நிகழ்த்தியுள்ளனர். பலங்கால மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் வழிபாட்டு முறையினை திணைமொழி ஐம்பது எனும் நூல் எடுத்துரைக்கிறது. இதனை,

**"புகழ்மிகு சாந்து எரித்து புல்எரிஊட்டி**
**புகைகொடுக்கப்பெற்ற புலவோர் – துகள்பொழியும்**
**வான் உயிர்வெற்ப இரவின் வரல்வேண்டா**
**யானை உடைய சுரம்"** **திணைமொழி ஐம்பது, பாடல்-1**

எனும் பாடலில் அறியலாம். இப்பாடலில் "நீ வரும் வழியிலே யானை உண்டு ஆதலால் இனி இரவிலே வர வேண்டாம் என்று தலைவனுக்குக் கூறுகின்றாள் தோழி. அப்பொழுது அவனுடைய மலையிலே நடைபெறும் தெய்வ வழிபாட்டை எடுத்துரைக்கின்றார். சந்தனக் கட்டையை வெட்டிக் குவித்து நெருப்பூட்டி அப்புகையால் தேவர்களை வணங்குகின்றனர். இப்புகையைப் பெற்ற தேவர்கள் மழை பெய்யச் செய்கின்றனர் என்ற கருத்தினைக் கொண்டதாக இச்செய்யுள் அமைந்துள்ளது. இவற்றைக் கொண்டு மழை வேண்டி தெய்வத்தை வழிபடும் வழக்கத்தை மக்கள் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

பழங்கால மக்கல் உயிர்ப்பலியிட்டுத் தங்களுடைய நேர்த்திக்கடனை நிறைவெற்றுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதைக் குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகனுக்கு ஆட்டுக் குட்டிகளை வெட்டி பூசையிட்ட செய்தியைக் கொண்டு அறிய முடிகிறது. இதனை,

**மறியீர்த்து உதிரம்தூய் வேலன் தரீஇ**
**வெறியோடு அலம்வரும் யாய்"** **ஐந்திணை ஐம்பது, பாடல் – 20**

எனும் பாடலைக் கொண்டு உணரலாம். வேலைக் கையிலேந்தி ஆடுகின்ற பூசாரியை அழைத்து ஆட்டுக் குட்டியை அறுத்து அதன் உதிரத்தை நான்கு திசைகளிலும் சிந்தி முருகனுக்குத் தம்முடைய நேர்த்திக் கடனைப் பழந்தமிழர் நிறைவேற்றியுள்ளனர் என்பது இப்பாடல்வழிப் பெறப்படுகிறது.

நடுகல்

போரிலோ அல்லது வீரச் செயல்கள் புரிந்தோ இறந்தவர்களுக்கு கல் நட்டு வழிபடுகின்ற முறை பழந்தமிழரின் பண்பாட்டுக்கூறுகளுல் முதன்மையானதாகும். இறந்தோரையும் உயர்வுபடுத்தும் தன்மை கொண்டவர்கள் தமிழர்கள் என்பது இதனால் புலப்படுகிறது. இறந்தவர்களுக்கு நடப்பட்ட கற்கள் நடுகல் என்னும் பெயரோடு வழங்கப்படுகிறது. இக்கற்களில் இறந்தவர்களின் உருவமும் படைக்களன்களும் இடம்பெறும். அத்தோடு ஒரே கல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கலும் செதுக்கப்பட்டுள்ளன. மனித உயிர்களின் உருவங்கள் மட்டுமின்றி சில நடுகற்களில் விலங்குகளின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. போரில் இறந்த வீரனுக்கு உதவிய விலங்குகள் அல்லது அவ்வீரன் வீழ்த்திய விலங்குகளின் தோற்றம் நடுகல்லில் இடம்பெறுகிறது. இத்தகைய நடுகற்களைக் குறித்துத் தொல்காப்பியர் கூறுகையில் ஆறு முறைகளைப் பகுத்துரைக்கின்றார். அவை,

1. காட்சி
2. கால்கோள்
3. நீர்ப்படை
4. நடுதல்
5. விழா
6. வாழ்த்துதல்

என்பனவாகும். இவற்றுள் காட்சி என்பது ஒரு கல்லினைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செதுக்குதல் ஆகும். கால்கோள் என்பது அக்கல்லினை நடுவதற்கு நல்ல சகுனம் பார்ப்பதாகும். இதனைத் தமிழர் நற்சொல் கேட்டல், நிமித்தம் ஆராய்தல் என்ற சொற்களாலும் வழங்குவர். நீர்ப்படை என்பது அக்கல்லை எவ்விடத்தில் நடவேண்டும் எனத் தீர்மானித்தல் ஆகும். விழா என்பது இறந்துபட்ட வீரனின் சிரப்புகளை அக்கல்லில் பொறித்தல் மற்றும் அவனைப் போற்றி விழா எடுத்தலாகும். வாழ்த்துதல் என்பது இறந்த வீரனை நடுகல் வழியாக வழிபடுதல் ஆகும். இந்த நடுகல் வழிபாடு பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடு மிகையாகத் தோன்ற அடித்தளமிட்டது எனலாம்.

நடுகல் முறையை அற இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன். இறந்துபட்ட வீரனின் நினைவாக நடப்பட்ட இந்நடுகல்லின் நிழலிலே கோரைப் பற்கலையுடைய பேயானது படுத்துறங்கும் கொடிய கானகம் என ஐந்திணை ஐம்பது கூறுகிறது. இதனை,

**“ நடுகல் விரிநிழல் கண்படுக்கும் வெம்கானம்”** **ஐந்திணை ஐம்பது, பாடல் – 35**

**கனவின் பலன்**

உறக்கத்தில் தோன்றுகின்ற கனவின்வழி வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழும் எனத் தமிழர் நம்பிக்கை கொண்டிருந்தனர். கனவின் வழி கண்ட காட்சிகளைக் கொண்டு நிகழப்போகும் செயல்களை முன்னரே அனுமானிக்கும் தன்மையினைப் பெற்றவர்களாகப் பழந்தமிழர்கள் திகழ்ந்தனர். சான்றாக,

**"பூம்கண் இடமாகும் கனவும் திருந்தின**
**ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம்நினைப்ப**
**வீங்கிய மெந்தோள் கவினிப் பிணிதீரப்**
**பாங்கத்துப் பல்லி படும்"** **ஐந்திணை எழுபது, பாடல் – 41**

என்னும் பாடலைக் கூறலாம். இதில் உயர்ந்த மலையைக் கடந்து சென்ற நம் காதலரைப் பற்றி நாம்நினைத்த உடனே அழகிய கண்களிலே இடக்கண் துடிக்கின்றது. கண்ட கனவுகளும் நல்ல கனவுகளாக இருந்தன. இளைத்துப் போன மெல்லிய தோள்கள் அழகுடன் பருத்தன. துன்பம் தீரும்படி பக்கத்திலே பல்லியும் சொல்லும். இவற்றைக் கொண்டு பழந்தமிழர் கொண்டிருந்த கனவுகள் குறித்தான நம்பிக்கையினை அறிய முடிகிறது.

**நம்பிக்கை, பழக்கவழக்கங்கள்**

பசுக்கள், இடையர்கள் ஊதும் கொன்றைக் குழலின் இனிய ஓசையைச் சுவைக்கும். அவர்கள் அக்குழலை ஊதினால் பசுக்கள் கூடும். அவர்கள் ஊதிக் கொண்டே சென்றால் அவர்களைத் தொடர்ந்து அவை செல்லும்.

**"கொன்றைக் குழல் ஊதிக் கோவலர் பின் நிரைத்துக்**
**கன்று அமர் ஆயம் புகுதர"** **ஐந்திணை எழுபது, பாடல் – 22**

'கொன்றைக் குழலை ஊதிக்கொண்டு போகும் இடையர்கள் பின்னே வரிசையாக கன்றை விரும்பும் பசு மந்தை ஊருக்குள் நுழைய' என்பதனால் பசுக்களின் இசை உணர்ச்சியினை அறியலாம்.

நல்ல நாளிலே தொடங்கும் காரியம் இடையூறு இல்லாமல் வெற்றி பெறும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. பெண் கேட்கச் செல்வார் நல்ல நால் பார்த்து அந்நாளிலேயே புறப்படுவார்கள்.

**"நாள் கேட்டுத் தாழாது வந்தால் நீ எய்துதல் வாயால்"**

**திணை மாலை நூற்றைம்பது, பாடல் – 46**

இப்பாடலின்வழி நல்ல நேரம் கேட்டுக் கொண்டு தாமதமில்லாமல் வந்தால் இப்பெண்ணை அடைவது உண்மையாகும் என்ற கருத்து பயின்று வந்துள்ளது.

நல்ல நால் பார்த்து அந்நாளிலே திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது. திருமணக்களத்தில் பலரும் அறியும்படி வாத்தியங்கள் முழங்கும்.

**"பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்**
**கல்யாணம் செய்து கடிபுக்க மெல்இயல்."**

என்னும் பாடல்வழி திருமனம் புரிந்து கொண்டு மனைக்குள் புகுந்தாள் மெல்லிய தன்மையுடையவள் என்பதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் தமிழரின் சிறந்த பண்பாடு. விருந்தினர் என்பவர் முன்பின் அறியாத புதியவர்கள். எந்நாட்டினராயினும், எம்மொழியினராயினும் நட்புக் கொள்ளும் எண்ணத்துடன் வீடு

தேடி வருவார்களாயின் அவர்களை வரவேற்பவர்கள் தமிழர்கள். விருந்தினரை வரவேற்று உபசரிப்பவர்கள் தாம் மறுமை இன்பத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை தமிழரிடம் குடிகொண்டிருந்தது. விருந்தினரை எவ்வாறு வரவேற்று உபசரிக்க வேண்டும் என்பதை,

**இன்சொல் அலாவல் இடம் இனிது ஊன் யாவர்க்கும்**
**வன்சொல் கலைந்து வகுப்பானேல் – மென்சொல்**
**முருந்து எய்க்கும் முட்போல் எயிற்றினாய்! நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து. ஏலாதி, பாடல் – 7**

என்ற பாடல் வழி அறியலாம்.

அகத்தின் அழகு நடத்தையில் தோன்ற வாழ்ந்தவர்கள் நம் முன்னோர். அக வாழ்வென்பது அவரவர் மனதோடு நின்று சிறந்தது எனினும் வாழ்வியல் பண்புகள் அங்கே குறைந்துவிடவில்லை. அங்கும் விருந்தோம்பல் பண்பு உள்ளிட்ட பெரும்பண்புகள் யாவும் சிறந்திருந்தன. கண்ணகி கதையிலே கோவலனைப் பிரிந்ததால் தன் இளமை பாழானது குறித்தோ தன்னைத் தான் அழகுற அலங்கரித்துக் கொள்ள இயலாமை குறித்தோ கற்பரசி வருந்தினாளல்லள்.

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும் விருந்தெதிர் கோடலும் இழந்ததையே" அவலமாகக் கொள்கிறாள். அதற்கே அகம் நோகிறாள். அப்படி கணவனோடு கற்புநெறியில் வாழும் வாழ்வின் குறிக்கோளாகவே விருந்தோம்பலைக் கருதினர். அதற்கெனவே பெரும்பொருள் ஈட்டினர். இதனை,

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு திருக்குறள், குறள்-81**

என்னும் வள்ளுவனார் வாய்மொழி விளக்குகிறது. சாவா மருந்தெனினும் விருந்தினரைப் புறக்கணித்து உண்ணாத மாண்பை வாழ்வியல் நூலான வள்ளுவம் காட்டுகின்றது.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று திருக்குறள், குறள்-82**

என்று கூறும் வள்ளுவம் விருந்தோம்பலின் சிறப்பைத் தனியே ஒரு அதிகாரம் வாயிலாகச் சுட்டுவது எண்ணத்தக்கது. இக்கருத்தினைப் புறநானூற்றில்,

**"........... இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியரும் உண்டலும் இலரே" புறநானூறு, பாடல் - 182**

என்று கூறுகிறது.

"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" என்பது பழந்தமிழ்ப் பாடலின் தொடராகும். விருந்து வருவதைக் குறித்த நன்னிமித்தமாகக் காக்கை கரைந்ததைப் பாடிய புலவரைக் "காக்கைப் பாடினியார்" என்று அழைத்தனர்.

**அடக்கமுடைமை**

**"தந்தையே ஆயினும்தான் அடங்கான் ஆகுமேல்**

**கொண்டு அடையான் ஆகல் இனிது.** **இனியவை நாற்பது, பாடல்-8**

தந்தையாயிருந்தாலும் சரி, அவன் அடக்கமற்றவனாயிருப்பின், அவன் சொல்லைக் கேட்டு நடக்காமல் இருப்பதே நலம்.

**கல்வி**

**"பிச்சை புக்காயினும் கற்றல் இனிதே"** **இனியவை நாற்பது, பாடல்-2**

பிச்சையெடுத்தாவது கல்வி கற்றல் மிகவும் சிறந்தது. இது அனைவரும் போற்றக்கூடிய சிறந்த அறிவுரையாகும்.

**பற்பல நாளும் பழுதுஇன்றிப் பாங்குடைய**
**கற்றலின் காழ்இனிது இல்**

பல நாட்களும் சோர்வில்லாமல் சிறப்பு நூல்களைக் கற்பதைவிட மிகச் சிறந்தது வேறொன்றும் இல்லை. இவை கல்வியின் சிறப்பை வலியுறுத்தின.

**"ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே"** **இனியவை நாற்பது, பாடல்-5**

வேறு ஒரு உயிரின் உடம்பைத் தின்று தன் உடம்பை வளர்க்காமல் இருப்பதே சிறந்த அறம் என்று கூறி புலால் உண்பதைத் தவிர்க்குமாறு கூறுகிறது இப்பாடலடி.

**முடிவுரை**

தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலின் ஒவ்வொரு செயல்பாடும் பண்பாட்டின் தாக்கம் நிறைந்ததாக அமைந்துள்ளது. அத்தகைய தமிழர் வாழ்வியலும் பண்பாடும் அற இலக்கியங்களில் அமைகின்ற பாங்கினை இறை நம்பிக்கை, நடுகல் வழிபாடு, கனவின் பலன், விருந்தோம்பல், அடக்கமுடைமை, கல்வி முதலான நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டது. சங்க கால மக்கள் மழை வேண்டியும், உயிர் பலி கொடுத்தும், இறை வழிபாடு செய்தனர் என்ற அவர்தம் இறைநம்பிக்கை குறித்த இலக்கியச் செய்திகளையும், விருந்தோம்பலில் கொண்டிருந்த ஈடுபாடு, அடக்கமுடைமையை அனைவருக்குமானதான வாழ்வியல் நெறியாகக் கொண்டமை, வாழ்வில் கல்வியின் முக்கியத்துவம் குறித்த அறஇலக்கியச் செய்திகளில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும் அமைந்திருந்த தன்மையினை அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநின்ற நூல்கள்**

1. இனியவை நாற்பது, பூதஞ்சேந்தனார், கழக வெளியீடு, சென்னை.
2. ஐந்திணை எழுபது, மூவாதியார், கழக வெளியீடு, சென்னை.
3. ஐந்திணை ஐம்பது, மாறன் பொறையனார், கழக வெளியீடு, சென்னை.
4. ஏலாதி, கணிமேதாவியார்,சாரதா பதிப்பகம், சென்னை.
5. திணை மாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், கழக வெளியீடு, சென்னை.
6. திணைமொழி ஐம்பது, கண்ணன் சேந்தனார், கழக வெளியீடு, சென்னை.
7. திருக்குறள், திருவள்ளுவர், கழக வெளியீடு, சென்னை.
8. புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.

**Reference**

1. Iniyavai Narpathu, Boothanchendanar, Kazahgam Publication, Chennai.
2. Ainthinai Ezhubathu, Muvadhiyar, Kazhagam Publication, Chennai.
3. Ainthinai Aimbathu, Maran Poraiyanar, Kazhagam Publication, Chennai.
4. Elathi, Kanimethaviyar, Sarada. Publisher, Chennai.
5. Thinai Malai Nutraimbathu, Kanimethaviyar, Kazhagam Publication, Chennai.
6. Thinaimozhi Aimbathu, Kannan Sentanar, Kazhagam Publication, Chennai.
7. Thirukural, Thiruvalluvar, Kazahgam Publication, Chennai.
8. Poorananuru, Kazahgam Publication, Chennai.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் ச.ஆதிநாராயணசாமி “அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 19-25

**Cite this Article in English**

**Dr S. Athinarayanasamy “ Ancient Culture and Customs in Moral Literature”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 19-25